மொழியாகப் பலவிடங்களில் இருந்து வருகிறது. அப்படிப் படிக்க விரும்புகிற மாணவர்களுக்கு இடர்பாடு ஏற்படாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Whereas I do not for a moment belittle the importance of learning the mother-tongue, Tamil, and whereas the study of English makes a man perfect, will the Government come forward along with developing the mother-tongue, viz. Tamil, the regional language, to teach the trainees in B.T. both in English and Tamil so that they may be better able to teach when they come to teach in the schools?

முற்பகல் 9-30 மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் ஆங்கிலம் மூன்றாவது வகுப்பிலிருந்து கட்டாயப்பாடமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலப் பயிற்சி தருவதிலே மேம்பாடு எய்த வேண்டுமென்பதற்காகத்தான் பல்வேறு முறைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் கவுன்சில் முறையிலேயும் ஆங்கில டீச்சிங் பயிற்றுவித்து ஆங்கில அறிவைக் கொடுக்க முயற்சிகள் இருக்கின்றன. ஆங்கிலம் தனிப்பாடமாக இருக்கிறதா இல்லையா என்ற விளக்கக்குறிப்பு இப்பொழுது என்னிடத்தில் இல்லை. ஆங்கிலத்தில் பி. ஏ. படித்து விட்டு சேரமுடியும். ஆகவே, பி. ஏ. வரையிலும் ஆங்கிலமொழியும் வேற்றுமொழியோ அல்லது வேறு தாய்மொழியோ கட்டாயப் பாடமாக வைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் ஆங்கில பி. ஏ. படித்துவிட்டு பி. டி. க்கு வருவதால் அவர்கள் ஆங்கிலத்தில் போதிய அளவிற்கு அறிவு படைத்தவர்களாகயிருப்பார்கள் என்று எதிர்பார்க்க வேண்டி யிருக்கிறது. மேலும் பிரிட்டிஷ் கவுன்சிலோடு பேசியிருக்கிறேன். பயிற்சிக் காலத்தில் ஆங்கிலப் பயிற்சியை மேலும் உருவாக்க, புதிய முறைகளைக் கையாளும் வகையில் அவர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். கோடைகால வகுப்புகள், மறு பயிற்சி வகுப்புகள் நடத்த பேருதவி செய்து வருகிறார்கள்.

Opening of Hindi schools.

* 615 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government are aware that the Education Ministry of Government of India is formulating a detailed scheme for opening Hindi Vidyalayas in select places in Tamil Nadu for teaching Hindi to those who are desirous of learning it?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன். இல்லை.

THIRU K. VINAYAKAM : Consequent on our language policy namely teaching only Tamil and English in our schools and whereas we have decided to discard the teaching of Hindi in our State, is the Government aware of the fact that, as Education is falling in the concurrent list, the Government of India is taking steps to open Hindi Vidyalayas in our State wherever people come forward to learn Hindi because of our intransigent attitude towards the language?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரு மொழித்திட்டம் வந்ததற்குப்பிறகு இந்தி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித்தருவதற்கு இந்த அரசு அக்கறையெடுத்துக் கொண்டு வருகிறது என்பதை இதற்கு முன்பு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கும் நேரத்தில் இந்த மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது,

1970 மார்ச் 31]

2,395 இந்தி ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களில் 67 பேர்களுள் பார்ட்—ஏ—யின் கீழ் ஆசிரியர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். 1,627 இந்தி ஆசிரியர்களுக்கு வேறு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 651 இந்தி ஆசிரியர்கள் அவர்கள் தற்காலிகமாகவோ அல்லது தகுதி யில்லாத ஆசிரியர்களாகவோ அல்லது பகுதி நேர ஆசிரியர்களாகவோ இருந்தவர்கள் மட்டும் வேலையிழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்பொழுது, தகுதி படைத்தவர்களுக்கு, வேறு வேலைக்குத் தகுதியிருந்தால், அவர்களுக்கு இடம் கொடுக்கக் கருதி 13 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்தின் சார்பாக இந்திப் பள்ளிகள் நிறுவும் யோசனை இல்லை. ஆனால் இந்தி பிரசார சபா 360 பள்ளிக்கூடங்களை, ஓராசிரியர் பள்ளிகளைத் துவக்கவிருப்பதாகவும், இந்திய அரசு தங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்திய அரசு under consideration என்று சொல்லியிருக்கிறார்கள், பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக் கிறார்கள். இந்திய அரசாங்கமே ஆரம்பிப்பதாக இல்லை என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு கிளர்ச்சி ஏற்பட்ட நேரத்தில், இந்திய அரசாங்கமே இந்திப் பள்ளிக்கூடங்களை வைக்கப் போகிறார்களாமே என்று மாணவர்கள் கிளர்ச்சியேற்பட்டபோது, இதற்கு டெல்லியிடம் விளக்கம் கேட்ட நேரத்தில், இந்திய அரசாங்கமே துவங்குவதாக இல்லை, இந்தி பிரசார சபா கேட்டிருக்கிறார்கள், அது பரிசீலனையில் இருக்கிறது என்று கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியபடி தனியாக இந்தி படிப்பவர்களுக்கு வகுப்புகள் நடத்தி வருகிறார்கள். விரும்புகிறவர்கள் தாங்களாகவே சென்று படிக்கிறார்கள். அரசின் மூலமாக, அரசாங்கத்தின் கொள்கையாக இருமொழித்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தி மொழியைத் தனியாக இந்தி பிரசார சபா சொல்லிக்கொடுப்பதாக இருக்கிறது. அதன் முயற்சியிலே ஏற்படுத்தி, நடக்கும் வகுப்புகளுக்கு விரும்புகிறவர்கள் சென்று படித்துக்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் ஆங்கிலம் படித்தவர்கள்தான் முழுமையோடு கற்றவர்கள் என்ற கருத்தோடு பேசினார்கள். இப்பொழுது மறுபடியும் அது உண்மை என்று சொல்லுகிறார்கள். அடுத்தபடியாக, தமிழ் நாட்டின் மொழிக்கொள்கையினால் இந்தி ஆசிரியர்கள் வேலை தேடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். தமிழ் மட்டும் படித்தவர்களை முழு மனிதன் என்று ஒப்புக்கொள்ள மாட்டார்களா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, தமிழகத்தில் இந்தியைப் பரப்புவதற்கு மத்திய அரசாங்கம் இந்தியப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, இதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப் பட்ட செயற்குறிப்பு இந்த அரசுக்குத் தெரியவில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தியை நீக்கிவிட்ட தமிழகத் தில் மத்திய சர்க்கார் மறைமுகமாக இந்தியைத் திணிக்க இருப்பதாகக் கருத்து இருக்கிறதே, இந்த அரசு அதைத் தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நாம் ஆட்சிப் பொறுப்பையேற்று இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபிறகு, மறைமுகமாக எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அப்படி வருவதைத் தடுத்து வந்திருக்கிறது, இனியும் தடுத்து வரும். அந்த முறையிலே கிளர்ச்சி யேற்பட்டபிறகு, அவர்கள், நாங்கள் ஆரம்பிக்கவில்லை என்று கூறினார்கள். அவர்கள் கேட்டிருக்கிறார்கள், அது பரிசீலனையில் இருக்கிறது, முடிவு செய்யவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்திப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் இந்த அரசுக்கு அனுப்பப்படவில்லை.

திரு. கரு. சிமைச்சாமி: சார், தமிழகத்தில் இருமொழித் திட்டம் என்று சொல்கிறார்கள். தமிழ் நாட்டில் மத்திய சர்க்கார் நடத்தும் பள்ளிகளிலும், தமிழக அரசு நடத்தும் பள்ளிகளிலும், அல்லது தனியார் நடத்தும் பள்ளிகளிலும், தமிழை நடக்காத பள்ளிக்கூடங்கள் ஏதேனும் உண்டா? அப்படியிருந்தால் தமிழை இரண்டாவது மொழியாக நடத்த, குஜராத்தி, மராத்தியைத் தாய்மொழியாக வைத்து நடத்தும் பள்ளிகளில், தமிழை இரண்டாவது மொழியாக நடத்த ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்படிப் பட்ட வகையில் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குப் பிறமொழிப் பாடத்திட்டங்கள் நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தியல்லாமல், இரண்டு உயர்நிலைப்பள்ளிகளில் பாடம் நடத்த சென்னை மாநகரில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 13 மொழிகளிலும், பிற மொழிகளில் பாடம் நடத்த நாம் இந்த மாநிலத்தில் அனுமதித்திருக்கிறோம். இரண்டாவது பாடமாகக் கட்டாயம் தமிழ் படிக்க வேண்டும். வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு படிப்பவர்கள், கட்டாயமாக இரண்டாவது பாடமாகத் தமிழைப் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறது.

திரு. எம். எஸ். மணி: தலைவரவர்களே, ஆங்கிலம் கற்றவர்கள்தான் முழுமையான மனிதர் என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் தமிழை முழுமையாகக் கற்றவர் முழு மனிதர் இல்லையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அப்படிக் குறிப்பிட்டார்கள். அதன்படி எண்ணம் கொண்டவர்கள் சிலபேர் நாட்டிலே இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த அவையிலேயும், தமிழை அறிந்து, தமிழைத் தெரிந்து முழுமை பெற்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதை அவர்களின் கருத்திற்கு வைத்து, மொழி மட்டும் முழுமையான மனிதர்களை உருவாக்குவது அல்ல என்பதை நாம் நன்றாக அறிவோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், வருஷாவருஷம் இந்தி மொழி அபிவிருத்திக்காக மத்திய அரசு ஒரு தொகை ஒதுக்குகிறது, அதாவது இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைப் பரப்புவதற்காக அந்தப் பணம் ஒதுக்கப்படுகிறது. அதேபோல் ஒதுக்கப்படும் தொகையில் தமிழகத்திற்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்று தெரியுமா? இந்த அரசு அந்தத் தொகையில் பங்கு கேட்டிருக்கிறதா? இல்லையென்றால் தமிழக அரசாங்கம் தமிழ் பேசாத மாநிலங்களில் தமிழைப் பரப்புவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்து, அதற்கான செலவு செய்யத் திட்டம் வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்திய அரசு இந்திக்கு என்று அப்படித் தனிச் சலுகை கொடுப்பதை இந்த அரசு எதிர்க்கிறது. அது கல்வியமைச்சர் மாநாட்டிலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட மொழிக்கு மட்டும் 9 கோடி, 10 கோடி ரூபாய் என்ற அளவுக்குச் செலவழிக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் கூட இந்தியைப் பரப்புவதற்காக 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்தி மொழியான ஒரு மொழிக்கு மட்டும் வாய்ப்பளித்துவிட்டு, மற்ற மொழிகளுக்கு வாய்ப்பு வசதி ஏற்படாவிட்டால் நாளடைவில் ஒரு மொழிக்கு மட்டும்தான் எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கின்றன என்ற நிலை ஏற்பட்டு விடும். அந்த அளவிற்கு மற்ற மொழிகளுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கல்வியமைச்சர்கள் மாநாட்டிலே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மற்ற மொழிகளை சேர்ந்தவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஒரு மொழிக்கு வாய்ப்பு கொடுப்பதை இந்த அரசு எதிர்க்கிறது. மற்ற மொழிகளுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி யிருக்கிறது. வேறு பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் வற்புறுத்துகிறார்கள்.

அதற்குப்பிறகு, ஒரு மாநிலத்தில், மொழி வளர்ச்சிக்கு 1 கோடி ரூபாய் அளவிலே தருவது என்று சொன்னால் மற்ற மாநிலங்களுக்குக் குறைவாக வந்தால், இந்திக்கு மட்டும் தனிச் சலுகை கொடுப்பதை மாற்றி எல்லா தேசிய மொழிகளும் சம வாய்ப்பும், வசதிகளும் பெற வேண்டுமென்று இந்த அரசாங்கம் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு வருகிறது. அந்தத் தொகை எல்லா மொழிகளுக்கும், குறிப்பாக நம்முடைய தாய்மொழிக்கும் அளிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது, மேலும் வலியுறுத்தி வரும்.

திரு. ம. பொ. சிவஞானம்: தலைவரவர்களே, இந்தி மொழியில் இலக்கியங்கள், மற்ற விஞ்ஞான நூல்களை வளர்ப்பதற்காக மத்திய சர்க்கார் பொது நிதியிலிருந்து செலவழித்து வருகிறது. இந்த முயற்சி வெற்றி பெற்றால், இந்தி மொழி வளர்ச்சிக்கு மட்டும் மத்திய அரசு தொடர்ந்து உதவினால், மற்ற பிரதேச மொழிகளுக்குக் கெடுதல் ஏற்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். அந்த ஆபத்திலிருந்து தப்புவதற்காக, இந்தியை, அது வழங்கும் பிரதேச அரசுகளே வளர்க்க வேண்டும்; மத்திய அரசாங்கம் தலையிடக்கூடாது என்ற அளவிற்கு இந்த அரசாங்கம் பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதைத் தான் முதலிலேயே நான் குறிப்பிட்டேன். ஒரு மொழிக்கு மட்டும் வாய்ப்பு கொடுத்தால், அந்த மொழியில் மட்டும்தான் வாய்ப்பும், வசதியும் இருக்கின்றன என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்ற கருத்தை நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். மேலும் கல்வியமைச்சர்கள் மாநாட்டில ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்தி பேசுகின்ற ஒவ்வொரு மாநிலத் திலும் ஒரு கோடி ரூபாய் என்ற அளவில், இந்தி பேசுகின்ற 4 மாநிலங்களுக்கு 4 கோடி ரூபாய் அந்த வகையிலே கிடைக்கும். எனவே, மாநிலத்திற்கு மாநிலம் என்று ஒதுக்குவதைவிட மொழிக்கு என்று ஒதுக்குவதால் அந்தந்த மொழிகள் வளர முடியும். உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீஹார் மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் என்னும்பொழுது நமக்கும் 1 கோடி, ஆந்திராவிற்கும் 1 கோடி என்றால் நம்முடைய தமிழ் மொழிக்கு 1 கோடியும், ஆந்திராவிற்குத் தெலுங்கிற்கு ஒரு கோடியும்தான் கிடைக்கும். ஆனால் அந்த 4 மாநிலங்களுக்கும் 4 கோடி ரூபாய் கிடைத்து இந்தி வளர முடியும். இதைத் தவிர மத்திய அரசு 9 கோடி ரூபாய் செலவிடுகிறார்கள். இதைத் தான் எதிர்த்துச் சொல்லக்கூடிய நேரத்தில், மாநிலத்திற்கு மாநிலம் என்று ஒதுக்காமல் மொழிகள் என்று ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது.

பாஞ்சாலங்குறிச்சியில் பொருட்காட்சி

*616 **வினா—திரு. கரு. சிமைச்சாமி:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டபொம்மன் காலத்துப் பொருள்களைக் கொண்ட பொருட் காட்சியை பாஞ்சாலங்குறிச்சியில் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால் எப்போது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பாஞ்சாலங் குறிச்சியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட கட்டபொம்மன் காலத்துப் பொருட் களைக் கொண்ட பொருட்காட்சி ஒன்றை நடத்துவதற்கான செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை. எனினும், பாஞ்சாலங்குறிச்சியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட அரண்மனைப் பகுதிகளைப் பொதுமக்கள் தாராளமாகப் போய்ப் பார்க்க அனுமதிக்கப்படுகின்றனர்.

திரு. கரு. சிமைச்சாமி: கட்டபொம்மன் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை ஒன்று கமுதியில் இருக்கிறது. அந்தக் கோட்டை பீரங்கி சுட்டால் கூட